சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் : MCOP:31/2020
and
MCOP: 18/2020

2024ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23ம் நாள் மனுதாரர் சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. T.சண்முகபிரியா கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் ஞானபாண்டி (PW2) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>2வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

23.02.2024

1) விபத்தில் இறந்துபோனது என் அண்ணன் ஆகும். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. விபத்தில் இறந்த நபர் மாதம் ரூ.45 ஆயிரம் வருமானம் ஈட்டி வந்ததை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபரை வருமானம் ஈட்டாத நபராக தான் கருத முடியும் என்றால் சரியல்ல. இறந்து போனவர் எங்களது குடும்ப செலவுகளை பார்த்து வந்தார் என்பதை உண்மை இல்லை என்றால் என் அப்பா இறந்த பிறகு என் அண்ணன் தான் பார்த்து வந்தார். என் சகோதரசகோதரிகளின் கல்வி செலவுகளை இறந்துபோன என் அண்ணன் தான் செய்து வந்தார் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்தவிதமான ஆவணமும் இன்றி இறந்துபோன என் அண்ணன் தான் கல்வி செலவுகளை ஏற்றுவந்தார் என்பது நம்ப கூடியதாக இல்லை என்றால் சரியல்ல.

நான் முதல்விசாரரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. எந்தவித ஆதாரமும் இன்றி நான் தாக்கல் செய்துள்ள முதல்விசாரணை சாட்சியம் ஏற்றுகொள்ள கூடியது அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.